*ஒரு மகத்தான மாநகரத்தை ஒருங்கிணைந்து கட்டியெழுப்புவோம்*

**மாநகரம் வழங்கும் சேவைகள் உங்கள் அன்றாட வாழ்வுடன் தொடர்புடையவை**

கோட்டங்கள், பொழுதுபோக்கு வசதிகள், தெருக்கள், பாலங்கள், நூலகங்கள், போக்குவரத்து வசதிகள், அவசர சேவைகள், நீர் வழங்கல், கழிவகற்றல், மீள்பாவனைக்கிடல் என்பன உங்கள் மாநகராட்சி மன்றம் நாள்தோறும் மேற்கொள்ளும் 40க்கு மேற்பட்ட பெருஞ் சேவைகளுள் சிலவாகும் – அவற்றுள் சில அன்றாடம் 24 மணித்தியாலங்களும், கிழமையில் 7 நாட்களும் மேற்கொள்ளப்படும் சேவைகளாகும்.

பெரிதும் விரும்பப்படும் சிறந்த வாழ்க்கைத் தரம் கொண்ட மகத்தான மாநகரம் ஒன்றை நாம் கட்டியெழுப்பியுள்ளோம். மக்கள் அனைவருக்கும் மேற்படி சேவைகளை வழங்கி, வாய்ப்பளித்து, வாழ்வளிக்கவல்ல, வளமான மாநகரம் ஒன்றைக் கட்டியெழுப்புவதே மாநகராட்சி மன்றத்தின் பணியாகும்.

மேற்படி சேவைகளைப் பெறுவதற்கு ரொறன்ரோவாழ் மக்கள் அருகதை உடையவர்களே. அவற்றை மேற்கொள்வதற்கு வேண்டிய பணத்துள் ஒரு சிறு தொகை ஆதன வரி, புதிய ஆதன கைமாற்ற வரி, வாகனப் பதிவுக் கட்டணம் மூலம் ஈட்டப்படுகிறது. எனினும் மக்கள் எதிர்பார்க்கும் சேவைகளுக்கு வேண்டிய செலவை இறுப்பதற்கு நாம் தொடர்ந்து போராடி வருகிறோம். மாநகர வரவுசெலவுத் திட்டத் தொகையுள் மூன்றிலிரு பங்கு TTC, அவசர சேவைகள், சமூக சேவைகள் என்பவற்றுக்கு ஒதுக்கப்படுகிறது. ஆதலால் மாநகரத்தின் எஞ்சிய சேவைகள் அனைத்துக்கும் வரவுசெலவுத் திட்டத் தொகையுள் மூன்றிலொரு பங்கே கிடைக்கிறது.

அதேவேளை சமூகநலக் கொடுப்பனவு, நீதிமன்றக் கண்காணிப்பு போன்ற மாகாண சேவைகள் சிலவற்றுக்காகும் செலவையும் ரொறன்ரோவாழ் மக்களே செலுத்தி வருகிறார்கள். அந்தப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு நாம் மாகாணத்துடன் ஒத்துழைத்து வருகிறோம்.

கனடிய மாநகரங்கள் தமது அடிப்படைக் கட்டமைப்புக்கும் போக்குவரத்துக்கும் வேண்டிய செலவை இறுபபதற்குக் மேன்மேலும் கடன்படுகையில், மத்திய அரசாங்கமோ வரலாறு காணாத வருமான மிகையில் திளைக்கிறது. கனடிய மாநகரங்கள் எதிர்நோக்கும் சவால்களை மத்திய அரசாங்கம் புரிந்துகொள்ள வேண்டும். எமது மக்களின் போக்குவரத்து, தெருக்கள், பாலங்கள், கட்டடங்கள் போன்றவற்றைப் பேணுவதற்கு மாபெருந் தொகையை – கோடிக்கணக்கான டாலர்களை நாம் முதலீடு செய்ய வேண்டியுள்ளது. மாநகரங்களுக்கு ஒரு தேசிய போக்குவரத்துத் திட்டமும், நிச்சயமான நிதிவசதியும் – பொருளாதாரத்துடன் சேர்ந்து உயரும் பொருட்கள் - சேவைகள் வரியில் ஒரு சதத்துக்கு நிகரான தொகை போன்ற (www.onecentnow.ca) நிதிவசதியும் தேவைப்படுகின்றன.

மாநகரவாசி என்ற வகையில் உங்கள் மாநகரத்துக்கு உதவுவதில் உங்கள் பங்கினைச் செலுத்தவும். எமது மாநகரத்தைக் குறித்து நாம் பெருமைப்படும் வண்ணம் நாம் அனைவரும் ஒருங்கிணைந்து எமது மாநகரத்தைக் கட்டியெழுப்ப முடியும். 2008ம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தை வகுத்துவரும் ரொறன்ரோ மாநகரம், மக்களின் ஆதரவையும் தொழிலகங்களின் ஆதரவையும் வேண்டி நிற்கிறது. ஒரு மகத்தான மாநகரமாய் நிலைபெறுவதற்காக மத்திய, மாகாண அரசாங்கங்களின் ஆதரவையும் அது வேண்டி நிற்கிறது.

ரொறன்ரோ மாநகர வரவுசெலவுத் திட்டம் பற்றிய மேலதிக விபரங்களுக்கு நாடவும்: www.toronto.ca